## தேசிய நூலக மற்றும் ஆவணமாக்கல் சேவைகள் சபை – 2016

தேசிய நூலக மற்றும் ஆவணமாக்கல் சேவைகள் சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) பிரிவு மற்றும் 1998 இன் 51 ஆம் இலக்க தேசிய நூலக மற்றும் ஆவணமாக்கல் சேவைகள் சபை அதிகாரச்சட்டத்தின் 22 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தலின் தாமதத்தின் அடிப்படையில் சபையின் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 நவம்பர் 30 ஆந் திகதி சபையின் தலைவருக்கு வழங்கப்பட்டது. அதற்கு மேலதிகமாக நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டும் என நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

சபையின் இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள்

கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து தேசிய நூலக மற்றும் ஆவணமாக்கல் சேவைகள் சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் கொள்கை

சபையினால் இருப்புக் கிரயத்திற்கு பெறுமதி மதிப்பிடப்படுவதாக வெளிப்படுத்தப்பட்டிருந்த போதிலும், சகல இருப்புப் பெறுமதிக்காகவும் அந்தக் கொள்கை பின்பற்றப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் தெரிவுப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட 27 பொருள் வகைகளுக்குரிய இருப்பு விடயங்களின் கிரயம் தவிர வேறு அடிப்படையின் கீழ் பெறுமதியிடப்பட்டிருந்தது.

#### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அரச மூலதன மானியக் கணக்கின் இறுதி மீதி ரூபா 30,442,949 ஆக இருந்த போதிலும், அதற்குரிய காசேட்டில் மீதி ரூபா 26,850,159 ஆனமையால் ரூபா 3,592,790 தொகையான செலவிடப்படாத மூலதன மானியத் தொகையிலிருந்து பிரதிநிதித்துவப் படுத்தாமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நடைமுறை வேலைக் கணக்கில் மத்தியப்படுத்தப்பட்ட வளிப்பதனாக்கி முறைமைக்காக காணப்பட்ட ரூபா 39,206,047 தொகையான பூர்த்தி செய்யப்படாத வேலைப் பெறுமதி நிதிநிலைமைக் கூற்றில் காணி மற்றும் கட்டிடங்களின் வகுப்பில் சேர்க்கப்பட்டு காண்பிக்கப்பட்டிருந்ததுடன் பூர்த்தி செய்யப்படாத வேலை பெறுமதி மதிப்பீட்டின் அடிப்படை தொடர்பாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) பல்வேறு வகையான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு புத்தகங்கள் நன்கொடையளிக்கும் நிறுவனங்கள் மற்றும் நபர்களிடமிருந்து சபைக்கு கிடைக்கப்பெற்ற புத்தகங்கள் தொடர்பாக அவற்றைக் கையேற்றல், பதிவேடுகளுக்குக் கொண்டுவரல் மற்றும் சொத்துக்களின் பாதுகாப்பு தொடர்பாக சபையில் முறையான திட்டமொன்று பின்பற்றப்படாதிருந்ததுடன் அந்த வெளியீடுகள் மதிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்**

-----------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் ரூபா 3,955,074 ஆகக் காண்பிக்கப்பட்ட புத்தக இருப்பின் பெறுமதி, இருப்பு மெய்மையாய்வு அறிக்கைகளின் பிரகாரம் ரூபா 4,974,955 ஆனமையால் இருப்பு மெய்மையாய்வு அறிக்கைகளினை விட ரூபா 1,019,881 தொகை குறைவாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. மேலும், 2012 ஆம் ஆண்டு முதல் கொண்டுவரப்படுகின்ற ரூபா 4,909 தொகையான இருப்புப் பற்றாக்குறை தொடர்பான பொறுப்பு வாய்ந்தவர்களை இனங்கண்டு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அலுவலக காகிதாகிகள் மற்றும் நூலக காகிதாகிகள் இருப்பு, இருப்பு மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் ரூபா 1,049,639 ஆக இருந்த போதிலும், நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 1,106,549 ஆனமையால் ரூபா 56,910 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

**2.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

-------------------------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 248,496 தொகையான நானாவித முற்பணம் 08 வருடங்களுக்கு மேற்பட்ட காலமொன்றைக் கடந்திருந்த போதிலும், 2018 திசெம்பர் 26 ஆந் திகதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. இதில் ரூபா 121,970 பெறுமதியான மீதி இனங்காண முடியாத முற்பணமாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

(ஆ) ஒப்பந்தகாரர்களிடமிருந்து அறவிடப்பட்டு உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பிவைக்கப்பட வேண்டிய 03 வருடங்கள் முதல் 11 வருடங்கள் வரையிலான பழைய ரூபா 324,051 ஆன நிறுத்தி வைத்தல் வரித் தொகை 2018 திசெம்பர் 26 ஆந் திகதி வரையும் உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காணப்படுகின்ற இடர்கடன் மீதி ரூபா 12,392,992 ஆக இருந்ததுடன் இடர்கடன் பதிவேட்டின் பிரகாரம் மீதி ரூபா 12,457,569 ஆனமையால் ரூபா 64,577 தொகையான வேறுபாடு இனங்காண முடியாத மீதியொன்றாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

**2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமைகள்**

---------------------------------------------------------------------------------------------------------------------------------------

பின்வரும் சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | |
| (i) நிதிப்பிரமாணம் 110 | இழப்புக்கள் தொடர்பாக பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 371 | தேவையினை சரியாக மதிப்பீடு செய்யாமையினால் குழுக்கூட்டம் மற்றும் பல்வேறு கொள்வனவுகளுக்காக 26 சந்தர்ப்பங்களின் போது வழங்கப்பட்ட ரூபா 1,060,650 தொகையான முற்பணத்தில் ரூபா 307,866 தொகை மீளத் தீர்க்கப்பட்டிருந்ததுடன் 06 சந்தர்ப்பங்களின் போது வழங்கப்பட்ட ரூபா 24,500 தொகையான முற்பணம், செலவிடப்படாமல் மீண்டும் தீர்க்கப்பட்டிருந்தது |
| (iii) நிதிப்பிரமாணம் 702(3) | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் ஒப்பந்த உடன்படிக்கைகளின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. |
| (iv) நிதிப்பிரமாணம் 1646 | வாகன பொறுப்பு உத்தியோகத்தர்களினால் அறிக்கை சமர்ப்பிக்கப்படுகின்ற மாதத்திற்கு பின் அடுத்துவரும் மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன் பிரயாணம் தொடர்பான மாதாந்த பொழிப்பின் மூலப் பிரதியுடன் அந்தந்த மாதத்தின் ஓட்ட அட்டவணை தமது திணைக்களத்தின் தலைவரின் ஊடாக கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | |
| (i) பந்தி இலக்கம் 2(ஆ) | சொத்துக்களை இனங்காணல், கணக்கீடு செய்தல் மற்றும் அவற்றின் நிர்வகித்தலை இலகுபடுத்தும் வகையில் ஒவ்வொரு நிலையான சொத்திற்காகவும் திணைக்கள ரீதியான இலக்கத்தை உள்ளடக்கிய பதிவேடொன்று (பொது ஆ 290) பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ii) பந்தி இலக்கம் 2(உ) | நிலையான சொத்துப் பதிவேட்டில் பதியப்பட்டுள்ள நிதித் தரவுகளில் நிலையான சொத்துப் பேரேட்டில் பதியப்பட்டுள்ள நிதித் தரவுகளை ஒப்பிடக்கூடிய வகையில் பொது மாதிரிப் படிவம் 287 இன் பிரகாரம் நிலையான சொத்துப் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (இ) | 1998 இன் 51 ஆம் இலக்க தேசிய நூலக மற்றும் ஆவணமாக்கல் சேவைகள் சபை அதிகாரச்சட்டத்தின் 7 ஆம் பிரிவு | அமைச்சரின் முன் அங்கீகாரத்தின் கீழ் குழுவை நியமதித்தல் மற்றும் அவற்றின் செயற்படுநிலை தொடர்பான விதிகளைத் தயாரித்தல் சபையினால் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் கூட்டு அபிவிருத்திக் கொள்கையின் கீழ் வெளியீடுகளை கொள்வனவு செய்தலை நிர்ணயிக்கும் குழவை நியமிக்கும் போது, அமைச்சரின் முன் அங்கீகாரம் பெறப்படாதிருந்ததுடன், குழுவின் செயற்படு நிலை தொடர்பான விதிகளைத் தயாரித்தல் இடம்பெற்றிருக்கவில்லை. அதன் பிரகாரம் குழவின் உள்ளடக்கம், நியமித்தல் தொடர்பான ஏற்பாடுகள், கோரம், குழுவின் விடயப்பரப்பு போன்றவைகள் தொடர்பாக பரீட்சிப்பிற்கான குறிகாட்டிகள் காணப்படவில்லை. |
| (ஈ) | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | கணனிகள், கணனி துணைபாகங்கள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பான நிலையான சொத்துப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | 2009 செப்தெம்பர் 01 ஆந் திகதிய DMA/2009(2) ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வுச் சுற்றறிக்கை | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் கிரயம் ரூபா 103,265,566 பெறுமதியான தேசிய நூலக புத்தக இருப்புக்கள் 1976 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரை 37 வருடங்களாக மெய்மையாய்வு செய்யப்படாதிருந்தமையால் புத்தக ஒதுக்கத்தின் சரியான தன்மை மற்றும் பாதுகாப்பு தொடர்பாக ஏற்றுக்கொள்ள முடியாதிருந்தது. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் நிதி விளைவுகள் ரூபா 14,817,209 பற்றாக்குறையொன்றாக காணப்பட்டதுடன் அதற்கு முன்னைய நேரொத்த ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 10,185,344 ஆக காணப்பட்டமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 4,631,865 ஆன வீழ்ச்சியொன்றைக் காண்பித்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் அரசாங்க மானியம் ரூபா 9,850,000 இனால் அதிகரித்திருந்த போதிலும் நிர்வாகச் செலவினம் ரூபா 10,451,450 இனால் அதிகரித்தமை மற்றும் நூலகச் சேவைச் செலவினம் ரூபா 3,829,214 இனால் அதிகரித்தமை மற்றும் ரூபா 1,793,868 தொகையான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் விற்பனை நட்டம் என்பன மேற்கூறப்பட்ட வீழ்ச்சிக்கு பிரதான காரணங்களாக இருந்தன.

மீளாய்வாண்டினதும் கடந்த 4 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2012 ஆம் ஆண்டில் ரூபா 11,579,955 தொகையான பற்றாக்குறை மீளாய்வாண்டளவில் ரூபா 14,817,209 வரை தொடர்ச்சியாக அதிகரித்திருந்தது. அதாவது ஊழியர் ஊதியம், நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு என்பவற்றை மீளச் சீராக்கியதன் பின்னர் 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 50,364,487 தொகையான சபையின் பங்களிப்பு மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 90,504,497 வரை அதிகரித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 திட்டமிடல்

மீளாய்வாண்டின் போது மூலதனச் சொத்துக்களை கைப்பற்றுவதற்காக செலவிடப்பட்ட ரூபா 58,400,847 தொகையான செலவினத்தில் ரூபா 11,451,591 தொகை 2016 ஆம் ஆண்டிற்காகவும், ரூபா 46,949,256 தொகை 2015 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட பெறுகை நடவடிக்கைகளுக்காகவும் செலவிடப்பட்டிருந்தது. எனினும், 2015 ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்டிருந்த போதிலும், பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்த பணிகள் மீளாய்வாண்டின் போது நடைமுறை வேலையாக பெறுகைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

#### 4.1.2 செயற்படுநிலையும் மீளாய்வும்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நான்கு அத்தியாயங்களையும் முன்னுரையையுமுடைய பன்சியபனஸ் ஜாதக்க பொத்த 05 புத்தகங்களையுடையது. அதனை மீண்டும் அச்சிடுவதற்காக கல்வி வெளியீட்டுத் திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டிருந்த போதும், அந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. அதன் காரணமாக மீண்டும் அச்சிடல் நடவடிக்கைகள் சபையினால் மேற்கொள்வதற்கு 2015 ஆம் ஆண்டின் போது அங்கீகாரம் பெறப்பட்டிருந்ததுடன் 05 புத்தகங்களின் முன்னுரைகள் மற்றும் 02 அத்தியாயங்கள் 2017 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. III மற்றும் IV என்ற 02 அத்தியாயங்களில் கணக்காய்வுத் தினமான 2018 ஒக்தோபர் 01 வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1850 ஆம் ஆண்டு வரை வெளியிடப்பட்டிருந்த பழைய இலக்கிய நூற்கள் மற்றும் 1851 முதல் 2000 ஆம் ஆண்டு வரையும் அதற்குரியதாக வெளியிடப்பட்டுள்ள பாதுகாப்பினை உள்ளடக்கி சாடிகாரி சிங்ஹள நூல் பெயர் பதிவேட்டை கையளிக்கும் நடவடிக்கைகள் 2014 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட போதும் கணக்காய்வுத் திகதியான 2018 ஒக்தோபர் 01 வரையும் பூர்த்தி செய்திருக்கவில்லை.

(இ) நூல் விஞ்ஞாபன நிர்வாகப் பிரிவு, வெளியீடுகள் மற்றும் நூல் அபிவிருத்திப் பிரிவுகளினால் மீளாய்வாண்டில் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்ட கீழே குறிப்பிடப்படுகின்ற வெளியீடு வழங்கல் நடவடிக்கைகள் 2016 திசெம்பர் 31 வரையும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(i) இலங்கை தேசிய நூல் பெயர்ப்பட்டியலில் (தற்போதைய) 2015 ஒக்தோபர் சஞ்சிகைகள் முதல் 2016 செப்தெம்பர் வரை 12 சஞ்சிகைகள் மும்மொழிகளிலும் வழங்குவதற்காக மீளாய்வாண்டின் போது திட்டமிடப்பட்டிருந்த போதிலும், காலப்பகுதிக்குரிய இரண்டு சஞ்சிகைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ii) இலங்கை தேசிய நூல் பெயர்ப் பட்டியலில் 2014 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட 12 சஞ்சிகைகளின் தகவல்களை உள்ளடக்கிய ஒட்டுமொத்த வெளியீடும் மும்மொழிகளிலும் வழங்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் ஆங்கிலம் மற்றும் தமிழ் பகுதிகளின் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படாமை.

(iii) சிங்ஹள மொழிபெயர்ப்பு இலக்கிய நூல் பெயர்ப்பட்டியல் (1947-2015) தரவுகளை அடிப்படையாகக் கொண்டு வழங்கப்படாமை.

(iv) நூலக ஆராய்ச்சி பிரிவிற்குரிய தேசிய நூலக ஆய்வு சஞ்சிகையில் இரண்டு வழங்கப்படாமை.

(v) இலங்கை பருவகால சஞ்சினை கடித தொடர் ஒழுங்குமுறையின் 2015 இன் நான்காவது தொகுதியிலிருந்து 2016 இன் மூன்றாவது சஞ்சிகை வரை நான்று சஞ்சிகைகளில் இரண்டு சஞ்சிகைகள் வழங்கப்படாமை.

(vi) இலங்கை பட்டப்பின்பட்ட ஆய்வுகள் தொடர் ஒழுங்குமுறையின் 2011 - 2015 இன் தரவுகளை அடிப்படையாகக் கொண்டு வழங்கப்படாமை.

## 4.2 முகாமைத்துவச் செயற்பாடுகள்

--------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2012 ஆம் ஆண்டு முதல் மும்மாத ரீதியில் பிரசுரிக்கப்படுகின்ற பிறலேக்கா சஞ்சிகையை பிரசுரிப்பதற்கான கடிதத்தினை வழங்கும் போது சஞ்சிகையின் தொகுப்பாளரால் எடுக்கப்படுகின்ற தீர்மானத்தின் பிரகாரம் கடிதங்கள் தெரிவு செய்யப்பட்டிருந்த போதிலும், அது பொருத்தமான குறிகாட்டிகளை இனங்காணாமல் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) விற்பனையின் பின்னர் பணம் செலுத்தும் அடிப்படையில் எழுத்தாளர்களிடமிருந்து பெறப்பட்ட வெளியீடுகள் மற்றும் சபையினால் அச்சிடப்பட்டு விற்பனை செய்யப்படுகின்ற வெளியீடுகளை விற்பனை செய்யும் போது முகாமைத்துவ சபையினால் அங்கீகரிக்கப்பட்ட நிலையான விலைக்கொள்கை ஒன்று அறிமுகப்படுத்தப்படாதிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(இ) பாரம்பரிய எழுத்தாளர்களின் வெளியீடுகளை மீண்டும் அச்சிடுவதன் கீழ் அரிய வகை நூற்களை பாதுகாப்பதற்கு 2009 ஏப்ரல் 23 ஆந் திகதி கொழும்பு பல்கலைக்கழகத்தின் சிங்கள கற்கை பிரிவிற்கு கையளிக்கப்பட்ட போதும் கூட்டிணைக்கும் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டிய திகதி தொடர்பாக சேவைப்பங்களிப்பு நிறுவனத்துடன் இணக்கப்பாட்டிற்கு வந்திருக்கவில்லை. எனினும், கூட்டிணைப்பு நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டு அந்த நூல்கள் 2012 ஆகஸ்ட் 13 ஆந் திகதி சபைக்கு கையளிக்கப்பட்டிருந்தது. பின்னர் எழுத்து உருவாக்க நடவடிக்கைகள் மேற்கொண்டு அச்சிடுவதற்காக 2013 திசெம்பர் 02 ஆந் திகதி கல்வி வெளியீட்டுத் திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் திணைக்களத்தால் எழுத்து உருவாக்க நடவடிக்கைகள் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டு அது மீண்டும் சபைக்கு கையளிக்கப்பட்டிருந்தது. சபையினால் மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் பின்னர் அதனை அச்சிடுவதற்காக அச்சகருக்கு 2017 செப்தெம்பர் 11 ஆந் திகதி கையளிக்கப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வுத் திகதியான 2018 ஒக்தோபர் 01 ஆந் திகதி வரையிலும் அச்சிடல் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டு ஆவணங்கள் மீளக் கையளிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) சபையினால் 2011 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரை அச்சிடப்பட்ட ரூபா 2,392,489 பெறுமதியான நிறைவேற்றுத்தர 3,187 வெளியீட்டு இருப்பு மற்றும் பெறுமதி குறிப்பிடப்படாத 4,753 வெளியீட்டு இருப்பு என்பன கணக்காய்வுத் திகதியான 2018 ஒக்தோபர் 01 ஆந் திகதி வரையிலும் களஞ்சியத்திலும் நூல் விஞ்ஞாபன கட்டுப்பாட்டு பிரிவிலும் எஞ்சியிருந்தது.

## 4.3 செயற்பாட்டு செயற்றிறனின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 ஆம் ஆண்டின் போது பாவனையிலிருந்து அகற்றப்பட்ட றிஸோகிராப் இயந்திரத்திற்காக பயன்படுத்துவதற்கு கொள்வனவு செய்யப்பட்ட நுகர்வுப் பொருட்களில் ரூபா 75,170 பெறுமதியான இருப்பொன்று 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் களஞ்சியத்தில் எஞ்சியிருந்தது.

(ஆ) மீள் உள்வாங்கும் பிரிவினால் கொள்வனவு செய்யப்பட்ட வெளியீடுகள் அப்பிரிவிற்குச் கிடைத்த பின்னர் பயன்பாட்டுப் பதிவேடுகளுக்குக் கொண்டுவரல், இலக்கமிடல் மற்றும் கணனிமயப்படுத்தப்பட்டதன் பின்னர் நூலக விஞ்ஞாபன கட்டுப்பாட்டுப் பிரிவிற்கும், அதன் தகவல்கள் கணனி மயப்படுத்தப்பட்டதன் பின்னர் வாசகர் சேவைப் பிரிவிற்கும் விநியோகிக்கப்படுகின்றது. அந்த பணிகள் தொடர்பாக பரீட்சிக்கும் போது அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(i) மீள் உள்வாங்கும் பிரிவினால் நூல் விஞ்ஞாபன கட்டுப்பாட்டுப் பிரிவிற்கு வெளியீடுகளை விநியோகிக்கும் போது வெளியீடுகள் பாவனை தொடரிலக்கத்தின் பிரகாரம் விநியோகிக்கப்படாதிருந்ததுடன் விநியோகிக்கும் பட்டியல் இலக்கிடப்பட்டிருக்கவில்லை.

(ii) 2016 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட வெளியீடுகளின் தெரிவுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டதன் பிரகாரம் வெளியீடுகளின் 17 பட்டியல்களுக்குரிய ரூபா 1,651,165 பெறுமதியான சகல வெளியீடுகளும் வாசகர் சேவைப் பிரிவிற்கு கிடைத்திருக்காததுடன், வெளியீடுகளின் 08 பட்டியல்களுக்குரிய ரூபா 761,133 பெறுமதியான நூல்கள் தகவல் விஞ்ஞாபன கட்டுப்பாட்டுப் பிரிவிற்கும் கிடைத்திருக்கவில்லை.

(iii) மீள் உள்வாங்கும் பிரிவினால் கொள்வனவு செய்யப்பட்ட 893 வெளியீடுகளுக்குரிய பட்டியலைத் தயாரித்து அந்தப் பட்டியலில் குறிப்பிடப்பட்ட சகல வெளியீடுகளையும் முதலாவது நூல் தகவல் விஞ்ஞாபன கட்டுப்பாட்டுப் பிரிவிற்கும், அதன் பின்னர் வாசகர் சேவைப் பிரிவிற்கும் விநியோகிக்கும் போது வெளியீட்டு பட்டியலில் குறிப்பிடப்பட்ட வெளியீடுகளில் இருந்து 179 வெளியீடுகள் நூல் தகவல் விஞ்ஞாபனக் கட்டுப்பாட்டுப் பிரிவினால் வாசகர் சேவைப் பிரிவிற்கு விநியோகிக்கப்படாதிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(iv) மீள் உள்வாங்கும் பதிவேட்டில் ஆவணப்படுத்தப்பட்டு ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும், ரூபா 19,382 பெறுமதியான 08 வெளியீடுகள் மீள் உள்வாங்கும் பிரிவினால் நூல் தகவல் விஞ்ஞாபன பிரிவிற்கு விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை.

(v) மீள் உள்வாங்கும் பதிவேட்டில் ஆவணப்படுத்தப்பட்ட 1,300 நூல்கள் தகவல் விஞ்ஞாபன கட்டுப்பாட்டுப் பிரிவிற்கு விநியோகிக்கும் போது 225 நாட்கள் முதல் 621 நாட்கள் வரையிலான கால தாமதம் ஏற்பட்டிருந்தது.

## 4.4 நிதியத்தின் குறைவான பயன்பாடு

பெறுகை நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டு ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்டமையினால் அரசாங்க மூலதன மானியக் கணக்கில் வருடாவருடம் சேமிக்கப்பட்டு வந்த மீதி 2016 சனவரி 01 இல் உள்ளவாறு ரூபா 48,515,278 ஆகும். மீளாய்வாண்டிற்காக ரூபா 31,316,262 தொகையான மூலதன மானியம் கிடைத்திருந்ததுடன் அதில் ரூபா 58,400,847 தொகை செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் பெறுகை நடவடிக்கைகள் திட்டமிடப்பட்ட பிரகாரம் நிறைவேற்றப்படாமையின் காரணமாக 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 21,430,693 தொகை பயன்படுத்தப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்கபொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைவு வருடாந்த அறிக்கை என்பன கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கும் மற்றும் அதன் பிரதி உரிய அமைச்சிற்கும், பொதுத் திறைசேரியின் பொது முயற்சிகள் திணைக்களத்திற்கும் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2016 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 01 வருடமும் 09 மாத கால தாமதத்தின் பின்னர் 2018 திசெம்பர் 17 ஆந் திகதியே கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. மேலும் 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளுக்கான நிதிக்கூற்றுக்கள் இந்த அறிக்கைத் திகதி வரையிலும், கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

### 5.2 நிதிக்கூற்றுக்கள், புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளைப் பேணுதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபையினால் வேலை அல்லது சேவை தொடர்பாக ஒப்பந்தப்பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளுக்கான பேரேட்டுக் கணக்குகள் கணக்காய்வுத் திகதியான 2018 ஒக்தோபர் 01 ஆந் திகதி வரையிலும் பேணப்படாதிருந்ததுடன் ஆண்டின் இறுதியில் கொடுக்கல் வாங்கல்கள் பொழிப்பிலிருந்து பெறப்பட்ட மீதியை அடிப்படையாகக் கொண்டு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், அதனை கணக்காய்வின் போது ஏற்றுக்கொள்ள முடியாத நிலையில் காணப்பட்டது.

### 5.3 பெறுகைகள் மற்றும் ஒப்பந்தச் செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டு 2016 ஆம் ஆண்டின் போது பூர்த்தி செய்வதற்கு நிர்ணயிக்கப்பட்ட ரூபா 75,000,000 பெறுமதியான மத்தியப்படுத்தப்பட்ட வளிப் பதனாக்கி முறைமையை நிர்மாணிக்கும் ஒப்பந்தம் தனியார் ஒப்பந்தக்காரருக்கு கையளிக்கப்பட்டிருந்தது. உரிய நடவடிக்கைகள் 2017 ஆம் ஆண்டு வரையிலும் பூர்த்தி செய்யப்படாதிருந்ததுடன் அதற்காக ரூபா 2,299,176 தொகையான மதியுரைக் கட்டணங்கள் மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) சபையின் சில பிரிவினாலும் அச்சிடப்பட்ட பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதும் ஆண்டின் போது எவ்வளவு அச்சிடப்பட்ட பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டது என பரீட்சிப்பதற்கு முடியாத வகையில் தகவல்கள் ஆவணப்படுத்தப்படாதிருந்ததுடன் 2016 இன் வருடாந்த பெறுகைகள் திட்டத்தில் அதற்காக திட்டமிடப்பட்டிருக்கவில்லை.

(இ) பெறுகைகள் திட்டத்திற்காக முகாமைத்துவ சபையினதும், தேசிய பாதீட்டுத் திணைக்களத்தினதும் அங்கீகாரம் 2016 சனவரி 01 ஆந் திகதிக்கு முன்பெறப்படாதிருந்ததுடன் முறையே 2016 பெப்ரவரி 29 ஆந் திகதி மற்றும் 2016 மே 02 ஆந் திகதிகளில் பெறப்பட்டிருந்தன.

(ஈ) அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவை 2006 இன் தொடர்பு இலக்கம் 4.2.1 இல் விரிவான பெறுகைத் திட்டத்திற்கான மாதிரிக்கு இணங்க நிறுவனத்தின் விரிவான பெறுகைகள் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.4 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதிடப்பட்ட மற்றும் உண்மையான வருமானங்கள், செலவினங்களிற்கிடையே 24 சதவீதம் முதல் 93 சதவீதம் வரையான வீச்சில் கவனத்தில் கொள்ளக்கூடிய முரண்கள் காணப்பட்டமையால் பாதீடானது ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்காமை என்பது அவதானிக்கப்பட்டது.

## 5.5 தீர்க்கப்படாத கணக்காய்வுப் பந்திகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற அலுவலக தளபாட உபகரணங்களின் கிரயப் பெறுமதியான ரூபா 23,089,464 தொகையில் ரூபா 936,787 பெறுமதியான நடைமுறைச் சொத்துக்களின் இருப்பொன்று உள்ளடங்கியிருந்தது.

(ஆ) நிதிக்கூற்றுக்களில் ரூபா 1,306,632 கூட்டுப்பெறுமதியான சொத்துக்களுக்குரிய சொத்துக்களின் வகுப்பு இனங்காணப்படாமையின் காரணமாக அந்த சொத்துக்கள் பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது சபையின் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் வேண்டப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) சொத்துக் கட்டுப்பாடு | (i) | சொத்துக்கள் பதிவேடுகளுக்குக் கொண்டுவரப்படாமை |
| | (ii) | நன்கொடைப் புத்தகங்கள் பதிவேடுகளுக்குக் கொண்டுவரப்படாமை |
| (ஆ) கணக்கீடு | (i) | நிதிக்கூற்றுக்கள் குறித்த திகதியில் சமர்ப்பிக்கப்படாமை |
| | (ii) | பேரேட்டுக் கணக்குகளுக்கும் பட்டோலைகளுக்கும் இடையே இணங்காமை அவதானிக்கப்பட்டமை. |
| | (iii) | பேரேட்டுக் கணக்கில் பதிவு செய்யும் போது உறுதிச்சீட்டு இலக்கம் குறிப்பிடப்படாமை |
| | (iv) | களஞ்சிய இருப்பு கட்டுப்பாட்டுப் பேரேடு பேணப்படாமை |

| | | | |
|---|---|---|---|
| | | (v) | பேரேட்டுக் கணக்குகள் நாளதுவரையாகப் பேணப்படாமை |
| | | (vi) | இரத்துச் செய்யப்பட்ட காசோலை பதிவேடு பேணப்படாமை |
| | | (vii) | செலவினப் பேரேட்டினதும், பேரேட்டினதும் பதிவுகள் மேற்பார்வை உத்தியோகத்தர்களால் உறுதிப்படுத்தப்படாமை |
| (இ) | பெறுகைகள் | (i) | திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமை |
| | | (ii) | ஒப்பந்தப் பதிவேடு நாளதுவரையாகப் பேணப்படாமை |
| | | (iii) | பொருட்கள் கொள்வனவுக் கட்டளையின் பிரதி உடன்படிக்கை கோவையில் உள்ளடக்கப்படாமை. |
| | | (iv) | முற்பணம் தீர்த்தல் உறுதிச்சீட்டு உறுதிப்படுத்தப்பட்டு பதிவேடுகளுக்குக் கொண்டுவருவதில் தாமதம் காணப்பட்டமை |
| (ஈ) | அச்சிடப்பட்ட பொருட்களின் கொள்வனவு | (i) | திட்டமிடப்படாமை |
| | | (ii) | முற்தேவைகள் இணங்காணப்படாமை |
| (ஈ) | வாகனக் கட்டுப்பாடு | (i) | நாளாந்த ஓட்ட அட்டவணை புத்தகம் உரிய பிரகாரம் பராமரிக்கப்படாமை |
| | | (ii) | எரிபொருள் கட்டளைப் பத்திரத்தின் தொடர்பு ஓட்டக் குறிப்புக்களில் பதியப்படாமை |
| | | (iii) | வாகன ஓட்டப் புத்தகத்தில் ஓடப்பட்ட தூர அளவு சரியாகப் பதியப்படாமை. |